Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 57 | சனிக்கிழமை 22 ஜனவரி 2022 | தை 09 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 840
மொத்தம் 6,00,203

**உயிரிழப்பு**
நேற்று 17
மொத்தம் 15,272


## முல்லைத்தீவு மக்களின்
# 7,622 ஹெக்டெயர் காணியை சுவீகரிக்க அரசு முயற்சி!

உடன் நிறுத்துமாறு கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜன.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் விவசாய மற்றும் பூர்வீக நிலங்களான 7 ஆயிரத்து 622 ஹெக்டெயரை சுவீகரிக்க வன வளத் திணைக்களம் முயற்சிக்கின்றது. இந்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிடவேண்டும்.

15 ➤



## 85 கிலோ கஞ்சா சிக்கியது சுழிபுரத்தில் தம்பதி கைது!

கொழும்பு, ஜன.22

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட் டில் சுழிபுரத்தைச் சேர்ந்த தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15 ➤

## வழிப்பறிகளில் ஈடுபட்ட மூவர் பொலிஸ் பிடியில்

யாழ்ப்பாணம், ஜன.22

சுன்னாகம் மற்றும் இளவாலையில் பட்டப்பகலில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட 7

15 ➤

## அத்துமீறிய மீன்பிடி; காரைநகரில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.22

இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடியைக் கண்டித்து நேற்று காரைநகரில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சாமசங்களுடன் காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த ஆறுக்கும் [illegible]றபட்ட மீனவ

15 ➤





## தீப்பற்றி எரிந்த வீட்டிலிருந்த தாயும், மகளும் உயிரிழப்பு!

கிளிநொச்சியில் பரிதாபம்

கிளிநொச்சி, ஜன.22

கிளிநொச்சி. புன்னைநீராவி நாதன்குடியிருப்பில் தீயில் எரிந்து தாயும், 17 வயது மகளும் [illegible]ளனர். இந்தச் சம்பவம்

15 ➤



## மகனைத் தேடியலைந்த தாய் உயிரிழப்பு

வவுனியா, ஜன.22

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி வந்த தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். வவுனியா,

15 ➤

### முச்சந்தி முரளி



"அப்ப திரும்பவும் குப்பிவிளக்குக் காலம் வரப்போகுது பாருங்கோ..."

## கிளி. மருத்துவமனையில் நள்ளிரவு பெரும் தீ விபத்து

பலகோடி பெறுமதியான பொருள்கள் நாசம்

கிளிநொச்சி, ஜன.22

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தால் மருத்துவமனையின்

15 ➤





## நெல் அறுவடை பெரும் வீழ்ச்சி

ஒரு ஏக்கருக்கு 5 மூடையே விளைச்சல்

வவுனியா, ஜன.22

வவுனியாவில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்

15 ➤

## டொலர் இல்லையேல் மின்வெட்டு [illegible]

அமைச்சர் [illegible] கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

மார்ச் மாத இடைப்பகுதிக்குள் டொலர் கடன்கிடைக்காவிட்டால், நாளாந்தம் 4 மணித்தி

15 ➤

## வடக்கு வருகிறார் கோத்தா

யாழ்ப்பாணம், ஜன.22

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதிர்வரும் பெப்ரவரி மாதம்

15 ➤

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
12
JITF 2022
21 22 23
ஜனவரி January
10.00am - 8.00pm
இன்று இரண்டாம் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுச்சூழலுக்கு உகந்தது | 100% தேசிய தயாரிப்பு | நீண்டகால முதலீடு | முதல்தர கூரை தகடு உற்பத்தியாளர்

இலகுவான அனுபவம்

உங்கள் வீட்டிற்கு அல்லது கட்டிடத்திற்கு El Toro Products சீலிங்கினை தெரிவுசெய்வதன் மூலம், நீங்கள் இலகுவான சௌகரியத்தை தெரிவுசெய்கிறீர்கள். இது எடை குறைந்த வெப்பத்தை கட்டுப்படுத்தும் ஒரு தயாரிப்பாகும். El Toro சீலிங்கள் இலகுவாக போக்குவரத்து செய்யப்பட்டு பொருத்தக்கூடியவையாகும். விரைவாக பொருத்த முடிவதுடன் உங்களுக்கு மேலதிக பராமரிப்பு செலவையும் ஏற்படுத்தாது. தேவையற்ற பிரச்சினைகளை தராமல் உறுதியான நம்பிக்கையை தரும். El Toro சீலிங்கின் வனப்பை பார்த்துக்கொண்டே இளைப்பாறலாம்.

இலகுவை தெரிவுசெய்யுங்கள், El Toro வை தெரிவு செய்யுங்கள்




EL TORO
தூரநோக்குடன் எதிர்காலத்தை நோக்கும்

+94 117 661 661 +94 112 674 212 www.eltoro.lk

# கொள்கையை விட்டுக்கொடாவிடின் தீர்வை நோக்கிப் பயணிக்க முடியாது

## பெரமுனவின் எம்.பி. செனவிரத்ன தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 22**

**தேசியப் பிரச்சினை குறித்து கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டுள்ளது. நாடாக ஒன்றிணைந்து செயற்படுவதில் தமது கொள்கையை விட்டுக்கொடுத்து அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் என்ற இறுக்கமான நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்குமானால் ஒருபோதும் தீர்வை நோக்கிப் பயணிக்க முடியாது - என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான செனவிரத்ன தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க என்னால் மட்டுமே முடியும் என ஜனாதிபதி எங்கேயும் கூறவில்லை. இதில் அனைவருடைய ஒத்துழைப்பையும் அவர் எதிர்பார்க்கின்றார். இதுவே தலைவர் ஒருவரின் நிலைப்பாடாக இருக்கவேண்டும்.

போரின் பின்னர் வடக்கு, கிழக்கு மக்களுக்கு உரிய அபிவிருத்தி தேவைப்படுகின்றது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். போரின் பின்னர் மாகாண சபையை உருவாக்கிய தமிழ்த் தலைவர்கள் அதன் மூலமாக மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுக்க முன்வரவில்லை. மத்திய அரசாங்கம் ஒதுக்கும் நிதியைப் பயன்படுத்தவில்லை. அதில் மக்களுக்கு சேவை செய்யவில்லை. தமிழர் தரப்பு தமது நிலைப்பாடுகளில் இருந்து விடுபட்டு அபிவிருத்தி மற்றும் ஏனைய சகல வேலைத்திட்டங்களிலும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- என்றார். (ம)

# தேங்காய் எண்ணெய் தரமானதே இறக்குமதி

கொழும்பு.ஜன.22

தரமான தேங்காய் எண்ணெயே இறக்குமதி செய்யப்படுகின்றது என்று தென்னை அபிவிருத்திச் சபைத் தலைவர் கீர்த்தி வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேங்காய் எண்ணெயுடன் பாம் எண்ணெய்யை கலப்படம் செய்து பல வர்த்தகர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் குற்றச்சாட்டியுள்ளது.

பாம் எண்ணெய்க்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரியைக் குறைத்து அதற்கான நடவடிக்கையை மே... பட்ட வர்த்தகர்கள் முயற்சிக்கின்றனர்.

இதனால் பெரும்பாலான நுகர்வோர் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் கூற்று வெற்று வார்த்தையே!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 22

நாட்டில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி கூறினாலும் அது வெறும் வார்த்தைகளில் கூறப்படுகின்றதே தவிர செயலில் வெளிப்படுத்தவில்லை. பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்திச்சென்று கப்பம்பெற்று கொலைசெய்த கரன்னாகொட விடயத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்கவில்லை என்பதும் மனித உரிமைகளின் நிலைமையை வெளிப்படுத்துகின்றது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனது உரையில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்தார். கொரோனாவினால் பாதிப்புகள் ஏற்பட்டமை உண்மையே. ஆனால் எமது பொருளாதார வீழ்ச்சிக்கு அது காரணம் அல்ல. மனித உரிமைகளை பாதுகாப்பதாக ஜனாதிபதி கூறினார். தலைவராக நாட்டின் மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டிய கடமை அவருக்கு உள்ளது. ஆனால் வார்த்தைகளில் இதனைக் கூறினாலும் கடந்த காலங்களில் அது செயலில் இருக்கவில்லை. நாம் ஏற்பாடுசெய்த ஆ... மறைமுகமாக ... கொடுத்து அத... எடுத்த முயற்... உரிமை மீறல்தான். மனித உரிமையுடன் ஜனநாயகம் மற்றும் சட்ட சுயாதீனம் சமமாக கையாளப்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரைக் கடத்திச் சென்று கப்பம்பெற்றுக் கொலை செய்த கரன்னகொட விடயத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்கவில்லை. குற்றஞ் சாட்டப்பட்டவருக்குப் பதவி உயர்வு கிடைக்கின்றது. இதுதான் இந்த நாட்டின் நிலைமையாகும் - என்றார். (ம)

# உங்களுக்கு கிடைத்த ஆணையைவிட எமக்குக் கிடைத்த ஆணை மேலானது

*கொள்கைகளைக் கைவிடமுடியாது என்று கஜேந்திரகுமார் சீற்றம்*



**கொழும்பு,ஜன.22**

**அரசு பெற்றுக்கொண்ட ஆணையை விட, தமிழ் மக்கள் எமக்குக் கொடுத்த ஆணை மேலானது. தமிழர் ஆணையை மீறி, எமது கொள் கைகளைக் கைவிட முடியாது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் ஜனாதிபதி யின் கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத் தில், உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை மோசமான பொருளா தார நெருக்கடிக்கு இன்று முகங்கொடுத்து வருகின்றது. அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாது போனால், விரைவில் நாடு வங்குரோத்து நிலைமைக்குத் தள்ளப்படும். அதற்காகவேனும் கொள் கையை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதில், ஜனாதிபதிக்கு மாற்றுச் சிந்தனையொன்று இருக்கும் என்று வடக்கு-கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளான நாம் ஜனாதிபதியின் உரையில் எதிர்பார்த்தோம்.

ஆனால் "போரால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு பொருளாதார ரீதியில், கல்வி, தொழில் வாய்ப்பு, சந்தைவாய்ப்பு, சுய தொழில், குடிதண்ணீர் மற்றும் விவசாயம், வீடு, வீதிகள், மருத் துவமனைகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதற்காக வடக்கு, கிழக்கு மக் கள் பிரதிநிதிகள் தமது கொள் கைகளைத் தற்காலிகமாக கைவிட்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்கின்றார் ஜனாதிபதி.

தமிழ் மக்கள் கொடுத்த ஆணையை மறந்துவிட்டு ஜனா திபதி வழமையான இனவாத நடவடிக்கைகளை முன்னெடுக் கவே நினைத்துள்ளார். ஆனால் எமது மக்கள் எமக்குக் கொடுத்த ஆணையை ஒருபோதும் நாம் மீறமாட்டோம். இந்த ஆணைக் காக நாம் இழந்தவை அதிகம். எனவே அதனைக் கைவிட்டு, எம்மால் எதனையும் செய்ய முடியாது. அரசால் மாற்ற மொன்றை ஏற்படுத்த முடியாது. எதிர்க்கட்சியாலும் மாற்ற மொன்றை உருவாக்க முடியா துள்ளது. எதிர்கட்சியும் இனவா தக் கொள்கையில் மேலும் மேலும் ஒற்றையாட்சியை வலுப் படுத்தும் இறுக்கமான கொள் கையில் தான் பயணிக்கின்றது. ஆகவே இவ்வாறான நிலையில் எந்தவொரு கட்சிக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கப்போவ தில்லை. அரச கட்டமைப்பில் மாற்றத்தை உருவாக்குவதே அவசியமான மாற்றமாக இருக் கும்-என்றார். (ஒ-4,இ)

## முள்ளியவளையில் மனித எச்சம் மீட்பு மூன்று பேர் கைது!

முல்லைத்தீவு, ஜன. 22

முள்ளியவளைப் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட நாவல்காட்டு கிராமத் தில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து மனித எச்சங்கள் மீட்கப் பட்டமை தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி இந்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இது தொடர்பான விசாரணை களை முள்ளியவளை பொலிஸ் ...றுப்பதிகாரி எம். ...மையிலான ...னெடுத்துள்ளனர். ...ந்த நபரின் மனைவி மற் றும வேறு இருவர் என மூன்று பேரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன. (ம-19)

## இஸ்லாம் பாடநூல்களை உடனடியாக மீளப்பெறுக

*கல்வி வெளியீட்டு ஆணையாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 22

தற்போது பாடசாலை மாணவர் களுக்கு விநியோகிக்கப்பட் டுள்ள இஸ்லாமியப் பாடநூல் களை மீளப் பெற்றுக்கொள்ளு மாறு கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

கல்வி வெளியீட்டுத் திணைக் கள ஆணையாளர் நாயகம் பீ.என். அயிலப்பெருவினால் சகல தேசிய பாடசாலை அதி பர்கள் மற்றும் பாடநூல்கள் நேரடியாக விநியோகிக்கப்படும் பாடசாலைகளின் அதிபர் களை விளித்து அனுப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இஸ்லாம் தரம் 6 (சிங்களம்), இஸ்லாம் தரம் 6 (தமிழ்), இஸ்லாம் தரம் 7 (சிங்களம்), இஸ்லாம் தரம் 10 (சிங்களம்), இஸ்லாம் தரம் 10 (தமிழ்) மற்றும் இஸ்லாம் தரம் 11 (தமிழ்) ஆகிய பாடநூல்க ளையே மீளப் பெற்றுக்கொள் ளுமாறு தெரிவிக்கப்பட்டுள் ளது. மேற்குறிப்பிட்ட பாடநூல் களில் திருத்தங்கள் மேற் கொள்ள வேண்டியுள்ளமையி னால் இந்த அறிவிப்பு விடுக் கப்பட்டுள்ளது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

முன்னதாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்து விசா ரணை செய்த ஜனாதிபதி விசா ரணை ஆணைக்குழுவில், பாட சாலை மாணவர்களுக்கு வழங் கப்படும் இஸ்லாம் பாட புத்தகங் கள் சில தொடர்பில் விமர்சனங் கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சிறுமி மீது துர்நடத்தைக்கு முயன்றவர் நையப்புடைப்பு

கொழும்பு, ஜன. 22

தென்மராட்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி யில் 12 வயது சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்த முயன்ற குற்றச்சாட்டில் குடும்பத்தலை வர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

42 வயதான குறித்த நபர் சிறுமியொருவருடன் பாலியல் துர்நடத்தைக்கு முயன்றுள்ளார். இதை சிறுமி வெளிப்படுத்தியதை அடுத்து அவர் பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

இதையடுத்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார். (ம)




**கனநாளா இந்தப் பட்டதாரிப் பயிலுநர்கள் ஏங்கிக் கொண்டிருந்த நியமனத்தை இப்பதான் குடுத்தி ருக்கினம். ஆனால் அதிலையும் ஒரு பெரும் கூத்து நடந்திருக்கு. இப்பவே ஒவ்வொரு ஊரிலையும் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்,சமுர்த்தி அலுவலர் எண்டு ரண்டு மூண்டு அதிகாரியள் அங்கத்தைச் சனத்தின்ர குறையளைக் கேட்டு,தீர்க்கிறதுக்கு இருக்கினம். இப்ப அதைவிட மேலதிகமா ஒவ்வொரு பிரதேச சபைக்குள்ளையும் இருக்கிற வட்டாரங்கள் எல் லாத்துக்கும் இந்தப் பட்டதாரிகளை, அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் போட்டிருக்கினம்.**

**இவ்வளவு நாளா இப்பிடி ஒரு நியமனமே இருக்கேலை.பிரதேச சபையில நியமனம் எண்டால், அந்தப் பிரதேச சபையின்ர தலைமைக் காரியாலயம் இல்லாட்டி உப அலுவலகங்களில மட்டும்தான் வேலை. ஆனால் இப்ப இந்த வட்டாரத்துக்கு ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் மார் அந்தந்த வட்டாரங்களில உள்ள வாசிகசாலையில ஒப்பீஸ் போட்டு, அங்க உள்ள சனத்தின்ர நிறை, குறையளைக் கேட்டு அதைத் தீர்க்கவேணும். (முந்தி வட்ட விதானை எண்டு ஒரு பதவி இருந்தது. அது மாதிரித்தான் இப்ப இவையையும் வட்டார அதிகாரிகளாகப் போட்டிருக்கு போல)எத்தனை பேரைப் போட்டாலென்ன, சனத்தி ன்ர குறை தீர்ந்தால் சரிதானே எண்டு நினைச்சுக் கொள்ளவேண்டியதுதான்.ஆனால் அதுலையும் சில சிக்கல்கள், பிரச்சினையள் கிளம்பியிருக்கு.**

**குறிப்பா முல்லைத்தீவில உள்ள பிரதேச சபை வட்டாரங்களில பெண்களைத்தான் கூடுதலா உந்த வட்டார அதிகாரியளாகப் போட்டிருக்கு.**

**அப்பிடியான சில வட்டாரங்களுக்கு பெண்கள் போய் வாறதே பெரும் கஷ்டம். அதுவும் ஒவ்வொரு நாளும் போறதெண்டால் ஏலாதுதானே. அதோட இன்னொரு பிரச்சினையும் அவைக்கு வந்தி ருக்கு. அந்தந்த வட்டாரங்களுக்குப் பொறுப்பான உறுப்பினர் சிலர், தங்களுக்கு கீழதான் இந்த வட்டார அதிகாரியள் எண்ட தோரணையில, தங்கட எடுபிடியள் மாதிரி அவையை நடத்து கினமாம். ஒருமையில "வாடி, போடி" எண்டு மரியாதை இல்லாமல் கூப்பிடுறது, விடிய வாசிகசாலை ஒப்பீஸுக்கு வந்தவுடனயும், போகேக்கையும் தங்களுக்கும் அறிவிக்க வேணும் எண்டுறது, லீவு போடுறதெண்டாலும் தங்கட அனுமதி வாங்கவேணும் எண்டு மிரட்டுறது எண்டு அவையின்ர அட்டகாசம் கூடிக்கொண்டே போகுதாம். இதைப்பற்றி மேலிடத்துக்குச் சொல்லியும் பிரயோசனமில்லையெண்டதால, இப்பிடி வட்டார அதிகாரியளாப் போடுப்பட்ட மூண்டு பெண்கள் "இந்த வேலையே வேண்டாம்" எண்டு ராஜினாம ாப் பண்ணிட்டு போட்டினமாம்.**

**இப்பிடியே உந்த உறுப்பினர்மார், வட்டார அதிகாரிகளை மேய்க்க வெளிக்கிட்டால், மிச்சம் உள்ளவையும் வேலையை விடவேண்டியதுதான் எண்டும் சிலர் சொல்லுகினம்.**

**மேலிடத்தார் இதைப் பார்த்துக் கொண்டிருக்காமல், உரிய நட வடிக்கை எடுப்பினமோ...?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் ஏலத்தில் பெரும் சுரண்டல்

## உற்பத்தியாளர்கள் பாதிப்பு



**கிளிநொச்சி, ஜன.22**

**தேங்காய் ஏலத்தில் கூறப்படும் பணம் கிடைப்பதில்லை என்று கிளிநொச்சி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி பொதுச் சந்தைக்குக் கொண்டுசெல்லப்படும் தேங்காய்கள், ஏலத்துக்கு விடப்படுகின்றன. எனினும் ஏலத்தில் தீர்மானிக்கப்படும் பணம் உற்பத்தியாளர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே கரைச்சி பிரதேச சபை தலையீடு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தேங்காய் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ஒ-4-113)

## விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், 2022 ஆம் ஆண்டுக்குரிய விருதுகள் மற்றும் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய, கலைக்குரிசில் விருது, இளங்கலைஞர் விருது, சிறந்த நூற் பரிசுத் தெரிவு, பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள், நூற் கொள்வனவு, நடுவர் தெரிவு ஆகிய விருதுகளின், போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை, பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1-9)



# எம்.ஜி.ஆர்.பிறந்ததினம் யாழில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.22

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய நடிகருமான எம்.ஜி.ஆரின் 105ஆவது பிறந்த தினம் கடந்த திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆரின் சிலைக்கு, யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் மனைவி மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட வலி. கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷ் மற்றும் வலி. கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் செல்வம் உள்ளிட்டோர் எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (ச-20)



## யாழ். பல்கலையில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை பல்கலைக்கழக வளாகத்தில் பொங்கல் விழா இடம்பெற்றது.

இதன்போது விருந்தினர்கள் மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் பரமேஸ்வராச் சந்தியில் இருந்து பல்கலைக் கழக முற்றத்துக்கு பாரம்பரிய கலாசார நடனங்களுடன் அழைத்துவரப்பட்டு பொங்கல்விழா நடைபெற்றது.

கொழும்பு, மொரட்டுவ, சப்ரகமுவ, பேராதனை, மட்டக்களப்பு, வவுனியா, ஊவா, வெல்லச ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களின் கலைநிகழ்வுகளும் சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெற்றன.

நிகழ்வில் கலைப்பீடாதிபதி சுதாகர், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியும் அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளருமான பரா. நந்தகுமார், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள், அலுவலர்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-125)

# வன்முறைகளில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள்

## எச்சரிக்கையுடன் பிணை

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் வழக்குத் தொடரப்பட்ட, பாடசாலை மாணவர்கள் கடும் எச்சரிக்கையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலை ஒன்றில் மாணவர்கள் சிலர் குழுக்களாக இணைந்து வன்முறைச் சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். கடந்த வாரம் மாணவர்கள் சிலர் வன்முறையில் ஈடுபட்டனர். இதனையடுத்து மூன்று மாணவர்களுக்கு எதிராக, சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகள் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் இடம்பெற்றன.

இதன் போது சந்தேகநபர்களான மூன்று மாணவர்களும் நீதிவானால் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். மூவரையும் தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார். வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-4-20)

# ஏ.ரி.எம்மில் திருடிய பெண்

வவுனியா.ஜன.22

ஏ.ரி.எம். இயந்திரத்திலிருந்து வெளிவந்திருந்த பணத்தை, திருடியபெண், கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

இந்தச் சம்பவம் வவுனியா மருத்துவமனைக்கு அருகில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ள ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் எடுக்கச் சென்றவர், ஏ.ரி.எம். அட்டையைச் செலுத்தி, அறிவுறுத்தலை சரியாகப் பின்பற்றாது, பணத்தை எடுக்காமல், ஏ.ரி.எம்.அட்டையை மட்டும் எடுத்துச் சென்றுள்ளார்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த பெண்ணொருவர் இயந்திரத்தில் வெளிவந்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டு செல்ல முயற்சித்துள்ளார். எனினும் அங்கிருந்தவர்கள் அதனை அவதானித்து உரிமையாளருக்குத் தெரியப்படுத்தினர். இதனையடுத்து அந்தப்பெண் தான் பணம் எடுத்ததை ஒப்புக் கொண்டு, அதனை உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார். (ஒ-4-110)

# முதியவர்களைக் கட்டிவைத்து வீட்டுக்குள் புகுந்து கொள்ளை



கிளிநொச்சி,ஜன.22

வீட்டில் இருந்த முதியவர்களின் கைகளைக் கட்டிவிட்டு, வீட்டில் இருந்த பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சியில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்துள்ளது.

இரு முதியவர்கள் மற்றும் அவர்களது மாற்றுத்திறனாளியான மகன் ஆகியோர் உறக்கத்தில் இருந்தபோது, வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

வீட்டிலிருந்த அத்தியாவசிய உணவுப்பொருள்கள், வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட கோழிகள் மற்றும் [illegible] கொள்ளையிடப்பட்டுள்ளன. [illegible] கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். (ஒ-4-113)

# இசை ஆராதனை விழா

யாழ்ப்பாணம், ஜன. 22

காரைநகர் கிழவன்காடு, கலாமன்ற [illegible] சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் "175 [illegible] இசை ஆராதனை" விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், தொடக்கவுரையை இசைக்கலைமணி ஸ்ரீமதி வாசஸ்பதி ரஜீந்திரன் ஆற்றுவார். அத்துடன், ஈழத்துப்பிரபல நாதஸ்வர, தவில், வாத்திய, கர்நாடக இசைக்கலைஞர்களின் இசை ஆராதனையும் இடம்பெறும்.

மேலும், நிகழ்வுக்கான இலவச போக்குவரத்துச்சேவை யாழ். வண்ணை சிவன் கோயிலுக்கு அருகிலுள்ள கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் சுகாதார நடைமுறைகளுக்கமைவாக நடைபெறும் நிகழ்வில், இசை ஆராதனைகளில் ஆர்வமும் விருப்பமும் உள்ள கலைஞர்கள் இணைந்து கொள்ளலாம் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-ரி)

# உள்ளூராட்சி வட்டாரங்களில் அபிவிருத்தி அலுவலர்கள்

யாழ்ப்பாணம்.ஜன.22

உள்ளூராட்சி சபைகளின் ஒவ்வொரு வட்டாரத்திலும், கடமையாற்ற அபிவிருத்தி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக பட்டதாரிப் பயிலுநர்களாக அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றியவர்களுக்கு, அபிவிருத்தி அலுவலர் தரம் III க்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் அந்தந்த வட்டாரங்களிலுள்ள சனசமூகநிலையங்களில் அலுவலகம் அமைத்து, கடமைகளை மேற்கொள்ள வேண்டும். வட்டாரங்களில் காணப்படும் குறைபாடுகள், தேவைகள் போன்றவற்றை உள்ளூராட்சி சபைக்கு அறிவிக்கவேண்டும். (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிழைத்தவர்கள் தொடர்பில்

# விசாரணை செய்பவர்களை கைதுசெய்கின்ற பேரவலம்

## சந்திரிகா ஆவேசம்



**கொழும்பு, ஜன. 22**

**தவறிழைத்தவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் ஜனநாயக உலகில் எங்கும் இடம்பெறுவதில்லை. ஆனால், சர்வாதிகார நாடுகளைப்போன்று இலங்கையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக தற்போதைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 19ஆம் திகதி புதன்கிழமை அழைக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவர்கள் மீண்டும் மீண்டும் தவறு செய்து, நாட்டைச் சீரழித்துவிட்டு தங்களைச் சிறந்தவர்களாக காண்பிக்க முயற்சிக்கின்றனர். அவர்களது தவறுகளைப் பற்றிக் கூறுபவர்களைத் தவறானவர்களாகக் காண்பிக்கின்றனர். உலகில் எந்தவொரு இடத்திலும் எவரேனும் தவறிழைத்தால், அது தொடர்பில் பொலிஸார் நியாயமான விசாரணைகளை முன்னெடுத்து அதன் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

ஆனால் இங்கு விசாரணை செய்பவர்களை அச்சுறுத்துகின்ற அல்லது கைதுசெய்கின்ற நிலைமையே உள்ளது - என்றார். (ம)

# கைக்குண்டு மீட்பு; பிறிதொருவர் கைது

கொழும்பு, ஜன. 22

பொரளை தேவாலயம் மற்றும் நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் வைப்பதற்காக ஓய்வுபெற்ற மருத்துவ அத்தியட்சகருக்கு வெடிகுண்டுகளை வழங்கினார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அம்பாந்தோட்டை ரன்ன பிரதேசத்தை சேர்ந்த ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற மருத்துவ அத்தியட்சகரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், அவருக்கு வெடிகுண்டுகளை வழங்கிய நபர் கைது செய்யப்பட்டார். கைதானவரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)

கனடாவிலிருந்து

# நாடு கடத்தப்படும் இலங்கைத் தமிழர்

கொழும்பு.ஜன.22

இலங்கைத் தமிழ்க் கைதியொருவரை, கனடாவிலிருந்து நாடு கடத்துவது தொடர்பில், அந்த நாட்டின் அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

ஜீவன் நாகேந்திரன்(வயது42) என்ற இலங்கைத் தமிழரே இவ்வாறு நாடு கடத்தப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளார்.

கைதியொருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்தார் என்று இவர் உள்ளிட்ட 15 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஜீவன் நாகேந்திரனுக்கு எதிராக, ஏற்கனவே போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-4.இ)

# ஆய்வரங்கத்தொடர்

யாழ்ப்பாணம், ஜன. 22

திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்திவருகின்ற 'கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள், ஒரு பன்முகப் பார்வை' என்ற தலைப்பிலான ஆய்வரங்கத் தொடரின் 8 ஆவது நிகழ்வு, நாளை மாலை 7 மணிக்கு சூம் செயலி ஊடாக இடம்பெறவுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், 'ஈழத்து மரபுவழி நாடகங்களின் மேம்பாட்டிலும் பேணுகையிலும் மரியசேவியர் அடிகளாரின் வகிபங்கு' என்ற தலைப்பில், திருமறைக் கலாமன்ற நிர்வாக சபை உறுப்பினர் இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் ஆய்வை வழங்குவார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம்7893644809, கடவுச் சொல் cpa என்பவற்றுக்கூடாக இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-ரி1)

# அபிவிருத்தியை நோக்கி ஒன்றிணைந்து செயற்படுக

## சாவகச்சேரி தவிசாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி ஜன. 22

அரசால் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மார்ச் வரை நீடிக்கப்பட்டுள்ளதால் அடுத்த ஒரு வருடத்துக்கு சபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகர சபையின் அமர்வு கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபை உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் அடுத்துவரும் ஒரு வருடத்தில் மக்களின் தேவைகளை கண்டறிந்துசேவைகளை வழங்க வேண்டும்.

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் மின்தகன இயந்திரம் பொருத்துவதற்கு புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஊடாக மேற்கொள்ளமுன்வந்துள்ளனர். இவர்களுடன் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரும் பங்களிப்பை வழங்கவுள்ளனர்.

அத்துடன், நுணாவிலில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான காணி, சபையால் கொள்வனவு செய்யப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-9)

# 8,088 மாணவர்களுக்கு மன்னாரில் பைஸர் தடுப்பூசி

மன்னார், ஜன. 22

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 8 ஆயிரத்து 88 மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் ஆயிரத்து 67 மாணவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டதுடன் கடந்த 3 தினங்களில் 2 ஆயிரத்து 412 மாணவர்கள் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இதற்கமைய, இதுவரை பைஸர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 88 ஆக உயர்ந்துள்ளது- என்றுள்ளது. (ஒ-ரி1, 213)





# வீதிப் பெயர்ப்பலகை திறந்து வைப்பு

சாவகச்சேரி, ஜன 22

பிரம்மஸ்ரீ கேதீஸ்வரக்குருக்களின் நிதிப் பங்களிப்பில், கொடிகாமம் உசன் தேவாலய வீதிப் பெயர்ப்பலகை, மீளமைக்கப்பட்டு நேற்று முன்தினம் இரு மதத் தலைவர்களாலும் திறந்து வைக்கப்பட்டது. (ஒ-ரி1,159)

# வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் மக்களே உங்களை அரசனாக்குவர்

## அமைச்சர் நாமல் ஆலோசனை



கொழும்பு.ஜன.22


நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே அரசனாவதற்குப் போராடுவதை விடுத்து, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மக்களே எம்மை அரசனாக்குவர் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர்கள் சிலர் தங்களின் மனதில் உள்ள பிரச்சினைகளை பொதுவெளியில் பேசுவது பொருத்தமற்றது. இந்த நாட்டு மக்கள் எங்களுக்கு வாக்களித்தது ஒவ்வொருவரும் அரசனாகுவதற்கு அல்ல. ஜனாதிபதியைத் தெரிவு செய்தால், அந்த ஜனாதிபதியின் கொள்கையைப் பின்பற்றவேண்டும். நாம் அனைவரும் தனித்து ஆட்சியமைக்க முயலாமல், மக்களை ஆள முயற்சித்தால், சிறப்பாக இருக்கும். உலகளாவிய நோய்த் தொற்றுக் காரணமாக, பொருளாதார பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. நமது நாட்டின் பொருளாதாரத்திலும் சில பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. எனவே, தனிப்பட்ட கருத்துகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்-என்றார்.(ஒ-4.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அரிசி வருகை தாராளம்

## இந்தியாவும், சீனாவும் போட்டி



**கொழும்பு,ஜன.22**
**இலங்கையின் உள்நாட்டுச் சந்தையில், இந்திய அரிசி ஆக்கிரமிக்கும் நிலையில், சீனா 10 லட்சம் மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு இலவசமாக வழங்க முன்வந்துள்ளது.**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தற்போது உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இவற்றில் அதிகமானவை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனினும் இந்தியாவில் சேதன உரம் மூலம் உற்பத்தி செய்யப்படும் முதல் 10 பிராந்தியங்களில் தமிழ் நாடு இல்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில், நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வெள்ளை மற்றும் சிவப்புப் பச்சையரிசி 160 ரூபாவுக்கும், 190 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

உள்நாட்டு அரிசியின் விலை அதிகரித்துள்ளதால், வெளிநாட்டு அரிசியை பலர் கொள்வனவு செய்கின்றனர் என்று வியாபாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சீனா இலவசமாக அரிசியை வழங்கும் பின்னணியில், உடன்படிக்கையொன்று முக்கிய நோக்கமாக வுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4இ)

# நாட்டின் நெருக்கடி நிலைமைகளை எதிர்க்கட்சி புரிந்துகொள்ளவில்லை

## அத்துரலிய ரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 22
நாட்டின் தற்போதைய நெருக்கடியை எதிர்க்கட்சியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் புரிந்துகொள்ளத் தவறிவிட்டன என எமது மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போதைய மின் நெருக்கடிக்கு ஒரே தீர்வு புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதே. நாடு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று டீசலில் இயங்கும் அனல்மின் நிலையங்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியாமல் மின்வெட்டு ஏற்படுகிறது. ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்தில் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நடைமுறைப்படுத்துவது குறித்து வலியுறுத்தியிருக்க வேண்டும். நாடு ஒரு முக்கிய சவாலை எதிர்கொண்டுள்ளதுடன், உணவுப் பற்றாக்குறையும் உடனடியான பிரச்சனையாக உள்ளது. உலகளாவிய தொற்றுநோயைப் பொருட்படுத்தாமல் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம்- என்றார். (ம)

# விண்ணப்பம் கோரல்

கொழும்பு. ஜன. 22
பேராதனைப் பல்கலைக்கழகத்தால், வியாபார முகாமைத்துவ முதுமாணி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பங்களை, www.pgia.ac.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்வதோடு விண்ணப்பங்களை, ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்ப முடியும். (ஒ-ரி)

◆ ◆ ◆ ◆

கொழும்பு. ஜன. 22
மொறட்டுவ பல்கலைக்கழகத்தால், இலத்திரனியல்தொலைத்தொடர்பு பொறியியலில் முதுவிஞ்ஞானமாணி பட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.
விண்ணப்பப்படிவங்களை, http://www.ent.mrt.ac.lk/msc.eq என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை, ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்ப முடியும். (ஒ-ரி)

◆ ◆ ◆ ◆

கொழும்பு. ஜன. 22
ராஜரட்ட பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் வியாபார முதுமாணிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.
இந்த கற்கைநெறிக்கு, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் எந்தத் துறையிலும் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை, http://www.rjt.ac.lk/mba/ என்ற இணையத்தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பவேண்டும். (ஒ-ரி)

# தவறான முடிவெடுத்து பெண் சாவு

முல்லைத்தீவு, ஜன.22
முல்லைத்தீவு, கேப்பாபிலவு கிராமத்தைச் சேர்ந்த யுவதி ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
முல்லைத்தீவில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தைச் சேர்ந்த துரை றொபின்சா (வயது-27) என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-19)



# சாவகச்சேரி பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வு

கொடிகாமம், ஜன.22
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மற்றும் சாவகச்சேரி பிரதேசசபை ஆகியவை இணைந்து டெங்கைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.
வீடுகள், கடைகள், கோயில்கள், சந்தைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றில் டெங்கை கட்டுப்படுத்த சிரமதானப் பணிகளை மேற்கொண்டு கழிவுகளை தரம்பிரித்து சாவகச்சேரி பிரதேச சபையின் உழவு இயந்திரம் மூலம் அகற்றும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.
அத்துடன் பொதுமக்கள் டெங்கு நுளம்புகள் பரவ ஏதுவான சூழல் காணப்படின் அவற்றை அழித்து, துப்பரவு படுத்தி ஒத்துழைக்குமாறு ஒலிபெருக்கி மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-159)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22
சனச அபிவிருத்தி வங்கி யாழ்ப்பாணக் கிளையின் ஏற்பாட்டில், 2020 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கடந்த 19 ஆம் திகதி ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.
கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான நிகழ்வில், சித்தியடைந்த மாணவர்கள், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் ஈஸ்வரநாதன், "யசோ கன்ஸ்ரக்சன்" உரிமையாளர் யசோதரன் ஆகியோரால், மகுடம் சூட்டி சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். (ஒ-ரி)



# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 22
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, மணவாளக்கோலத் திருவிழா சங்காபிஷேகம், இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளதால் அடியவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேவஸ்தான நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரி)

# போரின் இறுதியில் அரசிடம் ஆயுதங்களில்லை

## போட்டுடைத்தார் கப்ரால்

கொழும்பு,ஜன.22
இலங்கையில் விடுதலைப்புலிகளுடன் போர் நடைபெற்ற இறுதிக்காலத்தில், சில தினங்கள் அரச தரப்பிடம் ஆயுதங்கள் இல்லை. இந்தத் தகவல் இரகசியமாகப் பேணப்பட்டது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.
மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்தத் தகவலை ஊடகங்களுக்கு அன்று வெளிப்படுத்தியிருந்தால், விடுதலைப்புலிகள் அன்றே எம்மைத் தாக்கியிருப்பர். எனவே எல்லாவற்றையும் வெளியில் எம்மால் கூற முடியாது- என்றார். (ஒ-4இ)

# யானை சடலமாக மீட்பு

வவுனியா, ஜன. 22
வவுனியா குடாகச்சக் கொடி பகுதியில் உயிரிழந்த நிலையில் 30 வயதான 9 அடி உயர யானையின் சடலம் மீட்கப்பட்டது.
காட்டுப்பகுதியில் யானையின் சடலத்தை அவதானித்த மக்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்திருந்தனர்.
சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா பொலிஸார் வன உயிரிகள் திணைக்களத்துக்கு தகவல் தெரிவித்திருந்ததுடன், யானை இறந்தமைக்கான காரணம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ஒ-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நிலம் விழுங்கிகளின் தேசம்

ஆயிரமாயிரம் கொரோனாத் திரிபுகள் படையெடுத்தாலும், நாட்டின் பொருளாதாரமே செத்து பாடையிலே போனாலும் கூட இலங்கையின் பேரின அரசாங்கம் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல், தமிழர் தாயகத்தை எப்படிக் கபளீகரம் செய்வது என்ற ஒற்றைச் சிந்தனையோடுதான் இயங்கிக்கொண்டிருக்கும். அதைத் தான் இப்போது முல்லைத்தீவில் அரச இயந்திரம் விழுங்க எத்தனிக்கும் 7 ஆயிரத்து 92 ஹெக்டெயர் விவசாயக் காணிகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

போர்க்காலத்தில் பாதுகாப்பு என்ற காரணத்தைச் சாட்டாக வைத்து , தமிழர்களின் காணிகளை உயர் பாதுகாப்பு வலயமென அறிவித்து விட்டு, சிங்களப் பேரினவாதப் படைகள் தங்கள் வசமாக்கின. பின்னர் அவை மக்கள் போராட்டத்தினால், ஓரளவுக்கு விடுவிக்கப்பட்ட போதும், இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள்ளேயே, முட்கம்பிகளால் சூழப்பட்ட நிலங்களாக முடக்கப்பட்டிருக்கின்றன. இப்போது போர் இல்லை. ஆனால்,ஆடின காலும் பாடின வாயும் சும்மாயிருக்காது என்பது போல, தமிழர்களின் காணிகளைப் பிடித்துப் பழகிப்போன பேரின அரசுக்கு, கைகள் நமநமக்கின்றன போலும். அதனால் தான், வேறு ஏதும் வழிகளிலாவது தமிழர் தாயகத்தில் உள்ள காணிகளை விழுங்க நினைக்கிறது அரசு.அதன் ஓர் அங்கமாகவே வனவளத் திணைக்களத்தின் மூலம் பாட்டன், பூட்டன் காலத்தில் இருந்தே தமிழர்கள் விவசாயம் செய்து வந்த நிலத்தை கையகப்படுத்த வெகுவேகமாக முயற்சிகள் நடக்கத் தொடங்கியுள்ளன.

பசுமை போர்த்திய சிங்கராஜவனத்தை அழித்து, நட்டநடுவில் காப்பெற் வீதியைப் போடும் போதோ, அல்லது இதே தமிழர் பகுதிகளில் காடுகளை வெட்டி புதிதாக சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறும் போதோ, தன் கண்ணையும், காதையும் இறுக மூடிக்கொள்ளும் வன வளத் திணைக்களத்துக்கு தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்துவரும் காணிகள் மட்டுமே கண்ணை உறுத்துகின்றன. உண்மையில் சட்டப்படி காட்டினைப் பாதுகாக்கும் கடமை தவறாத திணைக்களமெனில், சிங்கராஜ வனத்தை அழித்துச் செய்யப்பட்ட புதிய வீதியமைப்புக்கு அனுமதி வழங்காமல் மறுத்திருக்க வேண்டும். தமிழர்களின் எல்லையோரக் கிராமங்களை அண்டிய காடுகளை அழித்து அத்துமீறிக் குடியேறிய சிங்களவர்களை ஓட ஓட விரட்டியிருக்க வேண்டும். ஆனால் எதையெல்லாம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்யாமல், தூங்கிக் கொண்டிருந்து விட்டு, தமிழர்களின் விவசாயக் காணிகளைப் பிடிக்க நினைப்பது எந்தவகையில் நியாயம்? சட்டத்தை இப்படி தம்மிஷ்டப்படி வெவ்வேறு விதமாக வளைப்பதுதான் ராஜபக்சக்களின் ஆட்சிச் சிறப்பா?

இந்த நாடு தனியே சிங்களவர்களுக்கும், ராஜபக்சக்களுக்கும் மட்டும் உரித்தானது அல்லவே. மூவின மக்களுக்கும் பொதுவானதே இலங்கை. 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்று செயலணி அமைப்பவர்கள், அத்தகைய ஒரே சட்டத்தை தமிழர் பகுதிக்கு ஒருவிதமாகவும், சிங்கள மக்களுக்கு இன்னொரு விதமாகவும் பிரயோகிப்பதை நிறுத்தினாலே, எங்கும் ஒரேவிதமான சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதை உறுதிப்படுத்த முடியும். தாமே சட்டத்தை வெவ்வெறு வகைகளில் பேதம் பார்த்து பயன்படுத்திக் கொண்டு எப்படி ஒரேசட்டத்தை பொதுமையாக்க முடியும்? முதலில் சிங்கள ஆட்சியாளர்கள் தம்மைத் திருத்தட்டும், பின்னர் நாட்டையும், சட்டத்தையும் திருத்தலாம். அதேசமயம், காணிகளை கபளீகரம் செய்யும் முயற்சிகளை வாய்பார்த்துக் கொண்டிராமல் அவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டியது தமிழ் அரசியல்வாதிகள் முன்னுள்ள பெரும் பொறுப்பு. காணிகள் கைவிட்டுப் போனபின்னர் புலம்பாமல், இப்போதே போராடத் தொடங்கினால் மட்டுமே அவற்றைத் தக்கவைக்க முடியும்.

'மாறுமோ நிலை எல்லாமே தன்னாலே?
போராடு நீயும் அறம் உண்டாகும் மண்மேலே!'

### நாளொரு நல்வார்த்தை

"மற்றவர்கள் உங்களை மதிக்கவில்லை என்று கவலைப்படாதீர்கள் மற்றவர்கள் மதிக்குமளவுக்கு உயர்ந்து காட்டுங்கள்"

– ஆபிரகாம் லிங்கன்



இந்தியாவிடம்

# நீங்கள் கடன் கேட்கிறீர்கள் நாங்கள் நீதி கேட்கிறோம்

### இதில் என்ன தவறு என்று கேள்வி எழுப்புகின்றது கூட்டமைப்பு

**கொழும்பு,ஜன.22**

**போர்க்காலத்தில் உலக நாடுகளிடம் ஆயுத உதவி கேட்டீர்கள். தற்போது கடன் கேட்கின்றீர்கள். நாம் எமது அரசியல் உரிமையைக் கேட்கின்றோம். நாம் நீதி கேட்பதில் என்ன தவறு?**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் நாடாளுமன்றில் அரசிடம் கேள்வி எழுப்பினார். நாடாளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில், உரையாற்றுகையில், அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசின் பொருளாதார ,அபிவிருத்தித் திட்டங்களுக்கு கொள்கைகளை மறந்து உதவிசெய்யவேண்டும். ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுள்ளார். இது வேடிக்கையான விடயம்.

இதேவேளை இந்தியப் பிரதமர் மோடிக்கு நாம் எமது மக்களின் பிரச்சினைகளைக் கூறி,13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டுமெனவும்,தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமெனவும் கோரிக்கைகளை விடுத்தோம். அதற்கான ஆவணத்தையும் கையளித்துள்ளோம். இதனையறிந்துள்ள இங்குள்ள அமைச்சர்கள், நீங்கள் எங்களுடன் தான் பேச வேண்டும். இந்தியாவிடம் கேட்டுப் பயனில்லை என்று கூறுகின்றனர். இந்த அரசு எமது பிரச்சினையைத் தீர்த்திருந்தால் நாங்கள் ஏன் இந்தியாவிடம் போகப்போகின்றோம்? - என்றார். (ஓ-4-இ)

# புதிய அரசமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வாம்

### பெரமுனவின் எம்.பி. டிலான் தெரிவிப்பு

கொழும்பு. ஜன. 22

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும்என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் சிம்மாசன உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எவ்வித விடயங்களும் குறிப்பிடப்படவில்லை என கூட்டமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்கள்பிரதிநிதிகள் அரசியல் வேறுபாடுகளைத் துறந்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என ஜனாதிபதி விடுத்த அழைப்பினை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். தவறுகளை திருத்திக்கொண்டு செயற்படுவது பிரதான எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது என்றார். (ம)

நாளை
23.01.2022
ஞாயிற்றுக்கிழமை
தை 10
சுபநேரம் : 09.36 – 11.06
ராகுகாலம் : 05.06 – 06.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நட்பு நாடாக ஒத்துழைக்க பிரிட்டன் தயார்!

**கொழும்பு, ஜன. 22**

**இலங்கையின் நெருங்கிய மற்றும் நடைமுறை நண்பராக ஒத்துழைக்க, பிரிட்டன் எப்போதும் தயாராக இருப்பதாக இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டனின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய அமைப்புக்கான அமைச்சர் லோர்ட் தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மிக முன்னேற்றகரமாக உள்ளன. அதனை மேலும் வலுப்படுத்துவதற்கு, நடைமுறை மற்றும் இலக்குகளை அடையக்கூடிய அணுகுமுறைகளுடன் முன்னோக்கிச் செல்வதன் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து மனித உரிமைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும்.

இலங்கைக்கான முதலீட்டு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும். ஐக்கிய இராச்சியத்தில் வாழும் பல்



வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார ஊழியர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பொருளாதாரத் துறைக்கான ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகவும், அவர் உறுதியளித்தார்.

இலங்கை எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதுடன், மக்கள் அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும். அதற்கு, ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கின்ற புலம்பெயர் இலங்கையர்களுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்த ஜனாதிபதி, அதற்காகப் புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குமாறும் லோர்ட் தாரிக் அஹமட்டிடம் கேட்டுக்கொண்டார். (ஒ-இ)



## முதலீட்டு வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்ளுங்கள்

*கொரியாவுக்கு கோத்தா அழைப்பு*

கொழும்பு, ஜன. 22

வேலைவாய்ப்பு, தொழிற்பயிற்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு தென் கொரிய அரசு ஒத்துழைப்பு வழங்கும் என்று, அந்நாட்டு தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் - சியோக் தெரிவித்தார்.

பார்க் பியோங்சியோக் மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

ஆசியாவின் கேந்திர நிலையமான இலங்கைக்கு, ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள கொரிய முன்னணி நிறுவனங்களை ஊக்குவிக்குமாறு பார்க் பியோங்சியோக்விடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

ஏறக்குறைய 22 ஆயிரம் இலங்கையர்கள் தென் கொரியாவில் தொழில் புரிவதுடன், அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் உயர் தொழில் பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். இலங்கைத் தொழிலாளர்களுக்கு தொழில் சந்தையில் அதிக வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பியோங் சியோக், ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையின் தொழில் பயிற்சிகளை மேம்படுத்துவதற்கும் கொரிய அரசின் உதவிகளை வழங்குவதற்கும் தென் கொரிய சபாநாயகர் உடன்பட்டதுடன், இந்த நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப அவற்றை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 22

அம்பாறை மாவட்ட மிதிகமவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிதிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துர்கி கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில், 46 வயதுடைய நபரே படுகாயமடைந்த நிலையில் வலான மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின் உயிரிழந்தார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-ரி1)

## வழங்கிய வாக்குறுதிகளை மறந்து செயற்படும் அரசு!!

*பிரிட்டனிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜன. 22

சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து செயற்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பிரிட்டனின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய அமைப்புக்கான அமைச்சர் லோர்ட் தாரிக் அஹமட்டிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு, மனித உரிமைகள் ஆகிய மூன்று விடயங்களிலும் இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை செயல் வடிவில் காண்பதற்கே பிரிட்டன் விரும்புகின்றது என்ற விடயத்தை அரசின் அத்தனை தரப்புக்களிடத்திலும் நேரடியாக தெரிவித்துள்ளேன் என்று எங்களிடம் குறிப்பிட்டார்.

ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கடந்த கூட்டத்தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி பிரிட்டன் தலைமையேற்று இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றப்பட்ட பிரேரணையான 46/1இனை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு எவ்விதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டினோம்.

பொறுப்புக்கூறல், மனித உரிமைகள், அரசியல் தீர்வு ஆகிய விடயங்கள் தொடர்பில் எவ்விதமான கரிசனைகளையும் கொள்ளாது அரசு நடந்துகொள்கின்றமையையும், வழங்கிய வாக்குறுதிகளை மறந்து செயற்படுவதையும் நாம் சுட்டிக்காட்டியிருந்தோம்.

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு நேரடியாகவே பயணம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்ததாகவும், பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடியதன் மூலமாக யதார்த்த நிலைமைகளை உணர முடிவதாகவும் அவர் (அமைச்சர் தரிக் அஹமட் பிரபு) எம்மிடத்தில் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த மார்ச் மாதக் கூட்டத்தொடரிலும் பிரித்தானியாவே முக்கிய வகிபாகத்தினைக் கொண்டிருப்பதால் அவரது பயணத்தின்போது கண்டறியப்பட்ட யதார்த்தமான விடயங்களின் அடிப்படையில் தீர்க்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொண்டுள்ளோம் - என்றார். (ஒ-இ)

## அடுத்த மாதத்துக்குள் தீர்மானம் எடுக்கவேண்டும்

*அரசுக்கு ரணில் ஆலோசனை*

கொழும்பு, ஜன. 22

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் அடுத்த மாதத்துக்குள் அரசு உறுதியான தீர்மானமொன்றை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளைபிரேரணை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச கடனை எடுத்துக் கொண்டால், 2019 ஆம் ஆண்டில் 13 ஆயிரம் பில்லியன் ரூபாவாக இருந்தது. 2021ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையில் அது 17 ஆயிரம் பில்லியனாக அதிகரித்துள்ளது. அந்நியச் செலாவணி மூலம் கடனுக்காக எதிர்வரும் 6 வருடங்களுக்கு ஒவ்வொரு வருடத்துக்கும் 6 பில்லியன் டொலரை செலுத்த வேண்டியுள்ளது. பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் இது தொடர்பில் நிதி அமைச்சர் அறிவிக்க வேண்டும்.

பல வருடங்களாக இருந்த முறைமைகளை நீக்கியமையால் டொலர் நெருக்கடி ஏற்பட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை மீதான நம்பிக்கை இல்லாது போயுள்ளது. இதற்கு குறுகியகால, மத்திய கால மற்றும் நீண்ட கால தீர்வுகள் வேண்டும் - என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உக்ரைன் எல்லையில் ரஷ்யா படைக்குவிப்பு

## வலுக்கிறது பதற்றம்

மொஸ்கோ, ஜன. 22
உக்ரைன் எல்லையில் ரஷ்யா படைகளைக் குவித்து வருகின்றது என்ற குற்றச்சாட்டு அண்மைக்காலமாக உள்ள நிலையில், ரஷ்யா மேலதிகமாக சில ஆயிரம் சிப்பாய்களை எல்லையில் குவித்துள்ளது.
'நேட்டோ' நாடுகள் கூட்டமைப்பில் இணைய உக்ரைன் ஆர்வமாக இருந்து வருகிறது. இதற்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால், இதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து கடந்த சில மாதங்களாக உக்ரைன்- ரஷ்யாவுக்கு இடையே மோதல் போக்கு நிலவுகின்றது.
இந்தப் பின்னணியில்தான் உக்ரைனுடனான தனது எல்லையில் படைகளை ரஷ்யா நிறுத்தியுள்ளது. இதுவரை ஒட்டுமொத்தமாக சுமார் ஒரு லட்சம் படைகளை ரஷ்யா எல்லையில் நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# திறன் பலகை கையளிப்பு



கொழும்பு றோயல் கல்லூரிக்கு 2 திறன் பலகைகள் அண்மையில் கையளிக்கப்பட்டன.
கலாநிதி இரத்னம் நித்தியானந்தத்தின் தன்னார்வத் தொண்டு நிறுவனமான ரட்ணம் மன்றத்தின் ஏற்பாட்டில், மருத்துவர் ரேவதி சத்தியநாராயணா, கிருஷ்ணன் திவாகரன் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் திறன் பலகைகள் வழங்கப்பட்டன. கலாநிதி நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், கல்லூரியின் பழைய மாணவரும் அவுஸ்திரேலியாவுக்கான முன்னாள் உயர்ஸ்தானிகருமான சோமசுந்தரம் ஸ்கந்தகுமார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறன் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். (ம-ரி1)




# ஒமிக்ரோன் பரவினாலும் ஊரடங்கு கிடையாது!

## நியூஸிலாந்து திட்டவட்டம்

வெலிங்டன், ஜன. 22
ஒமிக்ரோன் தொற்றுப் பரவினாலும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படாது என்று நியூஸிலாந்து அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.
இது தொடர்பில் நியூஸிலாந்தின் பிரதமர் ஜசிந்தா தெரிவித்ததாவது:
இந்தக் காலகட்டத்தில் நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் தொற்று, முன்பை விட வித்தியாசமானது. ஒமைக்ரோன் அதிகம் தொற்றும் தன்மை கொண்டது. இது கடினமாக இருக்கப் போகிறது.
கொரோனா மாறும்போது நாமும் மாற வேண்டியுள்ளது. ஆனால், இந்த முறை ஒமிக்ரோன் காரணமாக கொரோனா பரவல் ஏற்பட்டாலும் ஊரடங்கை நடைமுறைப்படுத்தும் திட்டம் இல்லை. கட்டுப்பாடுகளை மட்டுமே விதிக்க உள்ளோம். கடைகள் திறப்பு, உள்ளூர் போக்குவரத்து வழக்கம் போல் இருக்கும். பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் 'மாஸ்க்' அணியவேண்டும்' - என்றார். (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பிறக்கும். குழந்தைகள் பற்றிய கவலை தீரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். வெற்றிகரமான நாள். குடும்பத்தினரின் மனநிலையை அறிந்து அவர்களை அனுசரித்துச் செல்வீர்கள்.

**இடபம்:** மேலதிகாரிகளை அனுசரித்துச் சென்று நன்மை காண்பீர்கள். மனப்பக்குவம் உண்டாகும். தொழில், பணியில் மேன்மை உண்டு. சம்பள உயர்வு கிடைக்க தாமதமாகும்

**மிதுனம்:** பயம் தீரும். நட்பு வட்டம் விரிவடையும். புதிய திட்டம் ஒன்றை தீட்டி அதில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்ப்பாலினத்தினரால் திடீர் நன்மை ஒன்று உண்டாகும்.

**கடகம்:** எடுத்த செயலில் வெற்றிபெற அதிக முயற்சி தேவைப்படும். உடல் நலம் மேம்படும். பண விவகாரத்தில் நிதானமாக இருக்கவும். குடும்பத்தினரை அனுசரித்துச் சென்று நன்மை காண்பீர்கள்.

**சிம்மம்:** பணியிடத்தில் பிறருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. உறவினரிடம் இருந்து உதவி கிடைக்கும். கலகலப்பான நாள். வரவேண்டிய கடன் கிடைக்கும். விற்பனையும் லாபமும் வழக்கம்போல இருக்கும்.

**கன்னி:** தொழில் கை கொடுக்கும். வேலையாள்கள் ஒத்துழைப்பர். நிறை குறைகளை அலசி ஆராய்ந்து இன்று [illegible] சிந்தனை ஏற்படும்.

**துலாம்:** தனலாபம் உண்டு. பெற்றோரின் உடல் நலம் மேம்படும். சிரமப்படுபவர்களைக் கைதூக்கிவிட்டு அவர்களின் ஆசியைப் பெறுவீர்கள். பணியிடத்தில் புதுமையைப் புகுத்தி வெற்றி பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவர்களைத் துல்லியமாகக் கணித்து வெல்வீர்கள். உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். நீண்ட நாளாக இருந்த கவலை தீரும். கொடுக்கல், வாங்கலின் மூலம் நல்லதொரு தொகை கைக்கு வரும்.

**தனுசு:** பயணத்தின்போது கவனத்துடன் இருப்பது மிகவும் முக்கியம். பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் வளர்ச்சி கூடும். உங்களுக்கு தொல்லை தந்தோர் விலகுவர்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமை பலப்படும். பண உதவி கிடைக்கும். சேமிப்பு உயரும் நாள். நல்லவர்களின் சந்திப்புக் கிடைக்கும். புதிய முயற்சி எதுவும் இப்போதைக்கு செய்யவேண்டாம்.

**கும்பம்:** உங்களுக்கு நீங்களே எதிரியாகாமல் கவனமாக இருங்கள். யாருடைய வம்புக்கும் போகாமல் இருப்பது நல்லது. திட்டமிட்ட பயணத்தில் சிறிய மாற்றம் செய்வீர்கள்.

**மீனம்:** உடல்நலம் சீராகும். மனதில் இருந்த குழப்பம் தீரும். வீண் சண்டை, விவாதங்களில் இருந்து ஒதுங்குவீர்கள். உங்களது திறமைகளை வெளிப்படுத்த இன்று வாய்ப்புகள் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2022

12ஆவது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது. இந்தக்கண்காட்சி நாளை 23ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்தக் கண்காட்சியில் உள்ளூர், தென்னிலங்கை மற்றும் பல்தேசிய நிறுவனங்களின் காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நேற்றைய முதல் நாளிலேயே பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டனர்.


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வகத்தில் இணைய விண்ணப்பம் கோரல்

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும், மேலதிக வகுப்புக்கள், கணினிக் கற்கைகள், கவின் கலை வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், சுகாதார, மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.தகமையுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் 021 224 0146, 076 828 6331 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளமுடியும் என்று வாழ்வகத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-4இ)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் புவனேஸ்வரி

மண்ணில் : 25.05.1942 விண்ணில் : 21.01.2022



முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் புவனேஸ்வரி நேற்று (21.01.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கந்தையா வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகளும், வசந்தகுமார் (மேலதிக அரசாங்க அதிபர்- மன்னார்), உதயகுமார் (அதிபர் - கூமாங்குளம், வவுனியா), மணிமாலா, அமரர் ஜெயநேசன் (தயாளன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பதுமினி, அருன்மொழி (HNB வங்கி நிறைவேற்று அதிகாரி - வவுனியா), செல்வரத்தினம் ஆகியோரின் மாமியாரும், வாகீசன் (மென் பொருள் பொறியியலாளர்) அனுஷன் (மருத்துவபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) கங்கேஸ்வரன் (சிலிற் பல். கழகம், கொழும்பு) புருசோத்மன் (மாணவன்- வ/தமிழ் மத்திய வித்தியாலயம்), கிருசி (மாணவி, றம்பைக்குளம் - Convent), அர்சிகன் (L.BFinance, முல்லைதீவு), ஆர்த்திகன் (மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 3ஆம் வட்டாரம், முள்ளியவளை காட்டு விநாயகர் கோவில் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும்
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மகன் S.வசந்தகுமார்**
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**மன்னார்.**

(CS 945) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 04 . 1933 மறைவு 21 . 01 . 2022



## திருமதி முத்தையா கனகம்மா

கொக்குவிலை பிறப்பிடமாகவும், கனடா மற்றும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தையா கனகம்மா அவர்கள் நேற்று (21.01.2022) வெள்ளிக்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை ராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முத்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகராசா, காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற தர்மலிங்கம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரி, சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வநாயகம், மல்லிகா (கனடா), புஸ்பேந்திரன், தனிநாயகம் (ரஞ்சன்- கராஜ்), காந்தரூபன் (கனடா), அம்பிகா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, நகுலேஸ்வரன் (கனடா), சிவபாக்கியம், சற்குனேஸ்வரி, தர்சினி (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன் (சிறி-கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜித் (கனடா), கஜன், மயூரி (அவுஸ்திரேலியா), பிரசாத், பிரதீப் (லண்டன்), குகன்யா, சதுர்ஜன், லோசானி (கனடா), கீர்த்தனா (கனடா), அட்சயா (கனடா), சுவாதி (கனடா), தேவகாந்தன் (பிரான்ஸ்), முகுந்தன், ராஜி (பிரான்ஸ்), வசந்தன், தர்ஷினி (ஜேர்மனி), அஜந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அரசடி லேன்,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**தனிநாயகம் (ரஞ்சன்) மகன்**
**077 579 2399**

(CS 1258) 1/6

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்** **30.07.1944** **மறைவு** **21.01.2022**

அமரர்

## திருமதி சடாட்சரம் ஜெகசோதிமலர்

**அவர்கள் பிரான்சில் காலமானார்.**
**அன்னார் புவிச்சந்திரன்,**
**சதீஸ்வரன், மகிந்தன்**
**அண்ணாவின் அன்பு தாயார்**
**(வினோ நகைப் பூங்கா)**

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எப து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தேனு களஞ்சியம் - திருநெல்வேலி**
**விஜிதா றைஸ் மில் - தாவடி**
**பிரகாஸ் லைட் அன்ட் சவுண்ட் - திருநெல்வேலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் ஹாட்வெயர் கடைக்கு கணக்காளர் அனுபவமுள்ளவர்கள் தேவை.

070 640 6905, 077 541 3064

(CS 42383) (3/6)



## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

- அலுமினிய பொருத்துனர் - 1700.00 - 2000.00
- தச்சு வேலை - 1700.00 - 2000.00
- மேசன் - 1700.00 - 2000.00
- மேசன் உதவியாளர் - 1500.00
- பெயின்டர் - 1500.00 - 2000.00
- வெல்டர் - 1700.00 - 2000.00

தொடர்பு 077 724 5399

8.30 AM - 6.00 Pm தொடர்புகொள்ளவும்

(CS.42386) (2.6)



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள Decon கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் சாரதி தேவை. (ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வோர் விரும்பத்தக்கது).

தொடர்பு: 077 777 0969


## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை – யாழ்ப்பாணம்
### தேசிய வங்கிகளினால் நிதியளிக்கப்படும்
### "100,000km" வேலைத்திட்டம்

## மீள் கேள்வி கோரல்
## அலுவலக பாவனைக்கு வான் வாடகைக்கு அமர்த்தும் கேள்விகோரல்

"100,000km" வேலைத்திட்ட பயன்பாட்டிற்கான வாகனம் மூடிய கேள்வி கோரல்கள் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாணம், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்வார்.

| விபரம் | காலம் | தேவையான வாகனங்கள் | |
|---|---|---|---|
| அலுவலக பாவனைக்கான வான் (VAN) சாரதி, எரிபொருள் உட்பட வான் உற்பத்தி திகதி (2010ம்ஆண்டும் அதற்கு பிற்பட்ட ஆண்டுக்குள்) இருக்கைகள் 10ற்கு குறையாமல் இருக்க வேண்டும். குளிரூட்டி வசதிகள் தரமானதாகவும் இருக்க வேண்டும். | 12 மாதம் | யாழ்ப்பாணம் பிரதம பொறியிலாளர் அலுவலகம் | 1 |
| | | யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியிலாளர் அலுவலகம் | 1 |
| | | பருத்தித்துறை நிறைவேற்றுப் பொறியிலாளர் அலுவலகம | 1 |
| | | மொத்தம் | 3 |

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 24.01.2022ம் திகதி முதல் 28.01.2022 திகதி பிற்பகல் 3.00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் 28.01.2022 3.30 மணிக்கு திறக்கப்படும்.

**ஆர்வம் காட்டும் வழங்குனர்கள்**

கேள்விப்பத்திரங்கள் தயாரிப்பதற்குரிய விண்ணப்ப படிவங்கள் பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் மீள-ச்செலுத்தப்படாத ரூ.1000.00 வற்வரி உள்ளடங்காத கட்டணத்துடன் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் 24.01.2022ம் திகதி முதல் 28.01.2022 வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம இயந்திரி**
**வீ.அ.அ.சபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr.37396) (2.6)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள ஆண்கள் விடுதி உணவகத்தை நடாத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பொதுநிருவாக அலுவலகத்தில் 03.02.2022 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 03.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 07.02.2022 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், பொது நிருவாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அறிவியல் நகர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும் அல்லது இந்த முகவரிக்கு நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். மேலும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"ஆண்கள் விடுதி உணவகத்துக்கான விண்ணப்பபடிவம்"** எனத் தெளிவாகக் குறிப்பிடப் படவேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பொதுநிருவாக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். அலுவலகத் தொலைபேசி இலக்கம்: 021-2060180.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(cr.36117) (2.6)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



நிகழும் பிலவ வருடம் மார்கழி 23 ஆம் நாள் 07.01.2022 வெள்ளிக்கிழமை சிவ ஐக்கியம் அடைந்த எங்கள் இளைய மகன்

**அமரர் கனகலிங்கம் பார்த்தீபன்**

அவர்களின் மோட்ஷ தீபக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் இன்று (22.01.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது அத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(cs.42387) (2.6)

குடும்பத்தினர்

உ
சிவமயம்

## விவாஹ சுபமுகூர்த்த பத்திரிகா

**அன்புடையீர் !**

நிகழும் மங்களகரமான பிலவ வருடம் **தை மாதம் 10ம் நாள் (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை** ஷஷ்டித்திதியும் அத்த நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய **பகல் 10.32 மணி முதல் 11.22 வரையிலான** மீனலக்ன சுபமுகூர்த்தத்தில்

அராலியூர்
**சிவஸ்ரீ செ. சிவசாமிக்குருக்கள் கனகசௌந்தரம்மா**
தம்பதிகளின் ப்ரபௌத்திரியும்
**பிரம்மஸ்ரீ சி.பரமேஸ்வரசர்மா சரோஜினிதேவி**
தம்பதிகளின் பௌத்திரியும்
கந்தரோடை
**பிரம்மஸ்ரீ இ.சோமேஸ்வரசர்மா விமலாதேவி**
தம்பதிகளின் தௌஹித்திரியும்
**ஏமது ஏக புத்திரியுமாகிய**
சௌபாக்கியவதி **ஐஸ்வர்யா**
எனும் வதுவை



சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பரம்பரைக் குரு
**சிவஸ்ரீ ந.சுப்பிரமணியக்குருக்கள் சுந்தரவல்லி**
தம்பதிகளின் ப்ரபௌத்திரனும்
**சிவஸ்ரீ சு.நடராஜக்குருக்கள் அமிர்தாம்பாள்**
தம்பதிகளின் பௌத்திரனும்
**தாவடியூர் சிவஸ்ரீ கு.பரமசிவக்குருக்கள் அமிர்தவல்லி**
தம்பதிகளின் தௌஹித்திரனும்
**ஏமது த்ருதிய புத்திரனுமாகிய**
சிரஞ்சீவி **நிதீஸ்ராம்சர்மா**
எனும் வரனுக்கு

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகரினதும். அராலி கரைப்பிட்டி விநாயகரினதும் திருவருள் துணை கொண்டு கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோவிலில் கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹனம் செய்வதாக பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இருப்பதால் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம்அன்புடன் அழைக்கிறோம்.

**சமாவர்த்தனம் 22.01.2022 ஸ்திரவாரம் காலை 7.00 மணிக்கு மணமகன் இல்லம்**
**வதூவர கிருகப் பிரவேசம் 23.01.2022 பானுவாரம் மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லம்**
**வரவேற்பு உபசாரம் 26.01.2022 சௌம்யவாரம் மாலை 4.00 மணிக்கு மணமகள் இல்லம்**

**தங்கள் வரவை இனிதே நாடும்**

**சிவஸ்ரீ. ப. ஜெயகுமாரக்குருக்கள் உஷாதேவி தம்பதிகள்**
**அருளானந்தப் பிள்ளையார் கோவிலடி**
**கந்தரோடை சுன்னாகம்.**
**077 691 4236**

**சிவஸ்ரீ. ந. இராசேஸ்வரக்குருக்கள் சித்ரா தம்பதிகள்**
**சிவஸ்ரீ இ. கிஸ்ணராம்குருக்கள் தீபிகா தம்பதிகள் - மானஷா**
**பிரம்மஸ்ரீ. இ.ஸ்ரீராம்சர்மா பிரேமவனிதா தம்பதிகள் - ஷஹிஸ்னுசர்மா**
**பிரம்மஸ்ரீ இ. வசந்ராம்சர்மா**
**பிரம்மஸ்ரீ இ. சீதாராம்சர்மா**
**சரசாலை வடக்கு, சாவகச்சேரி**
**077 968 3045**

[இரு வீட்டார் அழைப்பு]

(cs.1162) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி தனலஷ்மி (தனம்) தர்மலிங்கம்

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கம்பளையை வதிவிடமாகவும், கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலஷ்மி (தனம்) தர்மலிங்கம் நேற்று முன்தினம் (20.01.2022) வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - விசாலாட்சி அவர்களின் அருமை மகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் கனகம்பாளின் அன்பு மருமகளும், தர்மராஜ், ஸ்ரீஹரன், தனபாலன், நவராஜ், சிவராஜ், தவராஜ், தர்மினி, லோகராஜ் ஆகியோரின் அருமை தாயாரும், சரினா, மிதுனலஷ்மி, அகிலேஸ்வரி, உமா, வசந்தா, கிரிஸ்டீன், சுதானந்தன், ஹேமா ஆகியோரின் மாமியாரும், டீனா, ஜூலி, டியானா, பிரேமைசாயி - மைதிலி, ஸ்ரீலஷ்மி - செந்தூரன், கிருஸ்ணா - சர்மினி காலஞ்சென்ற கிரிஸ்டி மற்றும் கிருசாந்தி - அம்ரித், மாலி, வினோத், வித்யா - சதன், விக்னேஷ், விக்ரம், சிந்துஜா - டேன், கார்த்திகா, அஞ்சலி, அனிருத் ஆகியோரின் பாட்டியும், அர்ஜீனன், அபினேஷ், லவின் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பகவதி, கணேசய்யா மற்றும் நாகராசா, தான்யலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற துரை சிங்கம் மற்றும் சத்யபாமா காலஞ்சென்ற சிந்தாமணி, காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (25.01.2022) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:

**தனபாலன் தர்மலிங்கம் (சுட்டி) மகன் - 001 416 885 6650**
**நவராஜ் தர்மலிங்கம் (நவம்) மகன் - 001 416 829 0664**
**தர்மராஜ் தர்மலிங்கம் (ராஜ்) மகன் - 077 713 6807**
**பிரேமைசாயி - 077 731 8188**

(CS 42366) (3/6)

## Accounts Executives
## Tokyo Supermix (Pvt) Ltd - Jaffna

The right candidates should possess
- Full/part qualification in CIMA/ICASL/ACCA or any other Accounting body.
- Minimum of 3years' experience in a similar capacity.
- Proficient in MS Office packages.

Please forward your CV e-mail with names and contact details of two non-related referees & passport size colour photograph (embedded to CV) within 14 days. Please mention the post applied in subject of the e-mail. Only e-mail applications are entertained.

Emails: seelan@tokyocement.lk,
careers. rmc@tokyocement.lk

(cr.37407) (2.6)

## 1 ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு 14 . 08 . 1934

இறப்பு 23 . 01 . 2021



### கோபாலசாமி பொன்னம்மா (மீனா)

**திதி: தசமி (11.02.2022)**

கணவர் : து.கோபாலசாமி
(கோபால் ஜுவல்லர்ஸ் யாழ்)
மகன் : கோ. துரையப்பா
சரவணாஸ் ஜுவல் கட்டிங்,
236, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மகள் மார்கள், மருமகன் மார்கள்,
மருமகள், பேரன், பேர்த்தி.

**077 484 4324**

(cs.1113) (2.6)

## மணல் ஏற்றியவர்கள் டிப்பர்களுடன் கைது

முல்லைத்தீவு, ஜன. 22

ஐயங்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய சந்தேக நபர்கள் 6 டிப்பர்களுடன், கடந்த 18 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர்களுக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக, சோதனையிட்ட போதே அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் குறித்த சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள், ஐயங்கன்குளம் பொலிஸ் அதிகாரி சுபுன் அபேசூரிய தலைமையில், கடந்த 19 ஆம் திகதி மாங்குளம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

(ஒ-ரி1.74)

## மரண அறிவித்தல்

மண்ணில் 05 . 01 . 1936

விண்ணில் 19 . 01 . 2022



### திருமதி கனகசுந்தரம் கனகாம்பிகை

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கனகசுந்தரம் கனகாம்பிகை அவர்கள் கடந்த (19.01.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நுவரெலியா வர்த்தகர் கார்த்திகேசு பொன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும், நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை பாறுபதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசுந்தரம் (ஓய்வு நிலை அதிபர்), அவர்களின் அன்பு மனைவியும், மோகனா (பிரான்ஸ்), கலாவதி (சுவிஸ்), சிவஹரன் (பிரான்ஸ்), சிவானந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவதாஸ், சிவராஜா, பதுமா, பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகசபை (ஓய்வு நிலை அதிபர்) மற்றும் இந்திராணி (ஓய்வுநிலை அசிரியர்), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (ஓய்வு நிலை ஆசிரியர்), மற்றும் ஓய்வு நிலை பேராசிரியர், குகபாலன் (யாழ் பல்கலைக்கழகம்), லோகநாதன் (ஓய்வு நிலை அதிபர் - ஜேர்மனி), திருநாவுக்கரசு (ஓய்வு நிலை அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, கண்மணி, கார்த்திகேசு, சோமசுந்தரம், இராசம்மா, சிவசிதம்பரம் (விதானையார்) பராசக்தி, திருநாவுக்கரசு மற்றும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை (ஓய்வு நிலை அதிபர்), சண்முகநாதன், (ஓய்வு நிலை அதிபர்), தனலட்சுமி (ஓய்வு நிலை ஆசிரியர்) மற்றும் கோகிலாதேவி, காலஞ்சென்ற காஞ்சனா மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், வேர்ஜீனியா - லவன், ஜீவிதா - தசன், ஹரிஹரன், ஸ்ரீசாயிதா - டிலக்ஷன், ஸ்ரீ சாய்கரன், பிரவீன், ஷரண், ஆதிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லேயா, தெயோ, சித்தார்த், லினா, அஃகேனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்களுக்கு

**0033609432897**
**077 922 0735, 077 871 5515**

(CS 42363) (3/6)

தகவல்
**க.சிவஹரன் (மகன்)**

## மரண அறிவித்தல்

மலர்வு 20 . 01 . 1942

உதிர்வு 19 . 01 . 2022



### கந்தையா குணசிங்கம்

யாழ். தென்மராட்சி சாவகச்சேரி நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி மட்டுவில் தெற்கு, வாகையடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குணசிங்கம் கடந்த (19.01.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அருணாசலம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் (மணி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கண்மணி, பாலசிங்கம், சிவபாக்கியம், சின்னத்தம்பி, ஜீவா, புஸ்பரத்தினம் ஆகியோரின் சகோதரனும், பிரபாகரன், கோமதி, கங்கேஸ்வரன், மேகலா, குந்தவி ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேஸ்வரி, விமலேந்திரன், இந்திரகரன், அருண்ஜா, துர்ஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சியானா, சகானா, லக்ஷான், டிஷான், ஓவியா, பிரியன், தருண், சோபிதன், நிகிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மட்டுவில் தெற்கு,
வாகையடி வீதி,
சாவகச்சேரி.

(cs 1174) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
**துவாகரன் - 077 957 1153**
**துர்ஷன் - 077 393 8002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரான்லி வீதியின் அகலிப்பு ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஜன.22

ஸ்ரான்லி வீதியின் அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இராசாவின் தோட்ட வீதியில் இருந்து முட்டாசுக்கடைச் சந்தி வரையான வீதியில், வாகன நெரிசலைக் குறைப்பதற்காகவும், வாகனத் தரிப்பிட வசதியை ஏற்படுத்துவதற்காகவும் குறித்த வீதி அகலிப்புச் செய்யப்படுகின்றது.

காப்பெற் வீதியாக மாற்றம் செய்வதற்கான அளவீடுகள் இடம்பெற்றிருந்த நிலையில், வீதியின் புனரமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள் என. இதனால் இராசாவின் தோட்ட வீதியிலிருந்து ஆரியகுளத்துக்கு இடைப்பட்ட பகுதியில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. (ஒ-4,125)


## வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய வீடு அல்லது 2 அறை மற்றும் சமையல் வசதியுடனான ஓர் பகுதி வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 358 0547

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் இயங்கிவரும் Hotel ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள House Keeping (ஆண், பெண்) தேவை.

தொடர்பு: 076 222 0632, 021 222 0630

## காணி விற்பனைக்கு

10 பரப்பு "தென்னம் காணி) நுணாவில் குளம் முருகன் கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. A-9 வீதியில் இருந்து 300 மீ தொலைவில் உள்ளது.

தொடர்புகளுக்கு: 077 476 0506


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
.
12
.
1958



மறைவு
02
.
02
.
2021

மருதடி மேற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்
மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் குமாரசாமி குணரத்தினம்

திதி : தேய்பிறை பஞ்சமி

எமது குடும்பத்தின் தலைமகனாகப் பிறந்து
நாம் உயர்வுற்று வாழ வழிகாட்டி
பாசமிகு குடும்பத்தலைவனாகவும்
அன்பான அண்ணாவாகவும் அனைத்து உறவுகளுக்கும்
- நேசமானவர்களாகவும் எம்முடன் வாழ்ந்து
யாருமே எதிர்பாரத வேளையில் இறைவனடி சேர்ந்த
எமது அன்புத்தெய்வத்தின் ஆத்மா
இறையடியில் இளைப்பாற
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை

என்றும் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

(cr.37398) (2.6)


## The Old Girls' Association of Chundikuli Girls' College, Jaffna.

### Annual General Meeting

- Date : Saturday, 29th January, 2022
- Venue : College Hall
- 9.00 a.m. : Holy Communion & Worship Service at St. John the Baptist's Church
- 10.30 a.m. : Fellowship Tea
- 11.00 a.m. : A.G.M

**Tickets - Rs. 200/=**

**All Old Girls are cordially invited**

(cs.42341) (2.6) Secretary

## முதியோர்களுக்கான வெற்றிடங்கள்

- எவ்வித வாழ்வாதாரங்களும், வீடு வசதிகளும், பராமரிப்பும் இல்லாதவர்களாக இருக்கவேண்டும்.
- 60 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
- கடுமையான நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது .
- உணவு, உடை, உறைவிடம் மற்றும் அடிப்படை மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும் .
- Covid-19 இரு தடுப்பூசிகளும் எடுத்தவர்களாக இருக்கவேண்டும்.
- உங்கள் கிராமசேவையாளரின் கடிதமும் உங்கள் சகோதரர் அல்லாத உறவினர்களின் தொலைபேசி இலக்கமும் வழங்கப்பட வேண்டும் .

மேலும் நவீன வசதி கொண்ட பிரத்தியேகமான அறைகளும் வாடகைக்கு உண்டு.

உணவு மற்றும் அடிப்படை வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

தங்கம்மா முதியோர் இல்லம்
புதுக்குளம், கனகராயன்குளம், வவுனியா.
0762438809, 0774499619, 0762482766

(cs.009561) (2.6)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
06
.
01
.
1996



இறப்பு
22
.
01
.
2020

### செல்வன் நடராசா கிருசாந்

வளர்ந்து வந்த வழி மாறி நீ எங்கே சென்றாயடா
விதி விளையாட கூட்டி சென்றதோ
பெத்தவர்கள் தவிக்கின்றார்கள்.
உற்றார் உறவினர்கள் கதறுகிறார்கள்
உன் ஓசை கேட்க வில்லையென
உன் உடன் பிறப்புக்கள் துடிக்கிறார்கள்
நீ மீண்டும் உதித்து வருவாயென
நீ பிறந்து வளர்ந்த ஊர் மக்கள்
விளித்துக்கொண்டு இருக்கிறார்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் எங்களை விட்டுப்பிரியாதடா
மீண்டும் உன் அழகு முகம்
ஒரு முறை தோன்றாதா..

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**


கொல்லவிளாங்குளம்,
வவுனிக்குளம், மல்லாவி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 1254) 1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு
14
.
05
.
1935



இறப்பு
21
.
01
.
2022

### கதிரித்தம்பி செல்லத்துரை

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கு, ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி செல்லத்துரை அவர்கள் நேற்று (21.01.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், யோகம்மா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சபாரட்ணம் மற்றும் பூரணம் தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசிந்தா (கனடா), யசிதரன் (லண்டன்), சசிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தன் (வவுனியா), சுதர்சினி (லண்டன்), குமாரதாஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CR 7151) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7,622....

இவ்வாறு வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான மூன்றாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வனவளத் திணைக்களம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலங்களை அபகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 2749.53 ஹெக்டெயரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 2275.61 ஹெக்டெயரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில்1764.81ஹெக்டெயரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 530.37 ஹெக்டெயரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 286.74 ஹெக்டெயரும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 14.95 ஹெக்டெயரும்என மொத்தமாக 7622 ஹெக்டெயர் மக்களுடைய விவசாய நிலங்களை, அவர்களின் பூர்வீக நிலங்களைச் சுவீகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட முயற்சி எடுக்கப்படுகின்றது.

இந்த முயற்சியை உடனடியாக நிறுத்த வேண்டுமென வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (எ-22)

## கிளி...

ஒரு பகுதி அழிவடைந்துள்ளது. மார்பு சிகிச்சைப் பிரிவு, மார்பு சிகிச்சை ஆய்வு கூடம், பாலியல் நோய் தடுப்புப் பிரிவு, களஞ்சியம், கதிர்வீச்சுப் பிரிவு ஆகிய பிரதான சிகிச்சைப் பகுதிகள் தீ விபத்தால் அழிவடைந்துள்ளன. இந்த சிகிச்சை நிலையங்களில் பணிகள் நிறைவுபெற்று சிகிச்சை நிலையங்கள் பூட்டப்பட்டிருந்த போதே தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவிலேயே மருத்துவமனையில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினர், இராணுவத்தினர், பொதுமக்களின் உதவியுடன் தீப்பரவல் ஒருவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீ விபத்தால் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத போதும், பெரும் பொருள் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

தீப் பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. தற்போது அந்தப் பகுதி எவரும் உட்செல்லாத வகையில் பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது. தீ விபத்துத் தொடர்பில் கொழும்பில் உள்ள அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் ஆய்வுக்கு பின்னரே தீப்பரவல் தொடர்பில் விவரம் தெரியவரும் என்று மருத்துவமனைத் தரப்பினர் தெரிவித்தனர். 2010 தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையான காச நோய் மற்றும் ஏனைய மார்பு நோயாளர்கள் தொடர்பான ஆவணங்களும் எரிந்து ழிந்துள்ளன. ஒரு வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த எச்.ஐ.வி. பரிசோதனை ஆய்வு கூடமும் அழிவடைந்துள்ளது. (எ-214,113)

## வழிப்பறிகளில்...

பவுண் நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் அண்மையில் சுன்னாகம் மற்றும் இளவாலை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்குக் கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்தது. பிரிவின் பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் புத்தூரைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 7 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்களிடமிருந்து நகைகளைக் கொள்வனவு செய்த சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணம் நகர நகைக் கடை உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## தீப்பற்றி...

நேற்றுமுன்தினம் இரவு 11.50 மணியளவில் நடந்துள்ளது.

தீப் பரவலில் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. சம்பவம் நடந்தபோது வீட்டில் தாயும், மகளுமே இருந்துள்ளனர். தந்தையும், சகோதரனும் வேலையின் நிமித்தம் வெளி மாவட்டத்துக்குச் சென்றிருந்த நிலையிலேயே இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

ஆனந்தராசா சீதேவி (வயது 37), ஆனந்தராசா லக்சிகா (வயது-17) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். தீப் பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை. குறித்த தாயும் மகளும் நேற்றுமுன்தினம் இரவே தீயில் எரிந்து மாண்ட போதும், அதுபற்றி எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுமாலையே தகவல் கிடைத்ததாக இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-113,214)

## மகனை...

பூம்புகார் கல்மடுவைச் சேர்ந்த கருப்பையா ராமாயி (வயது78) என்ற தாயே உயிரிழந்துள்ளார்.

இவரது வளர்ப்பு மகனான ரா.இந்திரபாலன் (வயது38) 2007 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து வெள்ளைவானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தொடர்ச்சியாகத் தேடி வந்த இவர், வவுனியாவில் ஆயிரத்து 799 நாள்களாக நடத்தப்பட்டு வரும் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் கலந்துகொண்டிருந்தார். இந்தநிலையில், தனது மகனைக் காணாமலேயே அவர் சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார். (எ-110)

## நெல்அறுவடை...

பட்டுள்ள நிலையில், ஒரு ஏக்கருக்கு 5 தொடக்கம் 7 மூடைகளே அறுவடையாகக் கிடைத்துள்ளது.

மாவட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் 50 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது பல்வேறு பகுதிகளிலும் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உர இறக்குமதிக்கு அரசு தடை விதித்திருந்தமையால், விளைச்சல் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த காலங்களில் ஏக்கருக்கு 30 மூடைகளுக்கு அதிகமாக விளைச்சல் கிடைத்த நிலையில், இம்முறை 5 தொடக்கம் 7 மூடைகளே விளைச்சல் கிடைத்துள்ளது.

ஒரு ஏக்கருக்கு 60 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் செலவளிக்கப்பட்ட நிலையில், 30 ஆயிரம் ரூபாவே வருமானம் கிடைத்துள்ளது. இந்த நட்டத்தை ஈடு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-4,110)

## டொலர்...

யால மின்வெட்டை நடைமுறைப்படுத்த நேரிடும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

இதற்கு தற்போதிலிருந்தே அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும். அர்ப்பணிப்புகளுக்கான முன்மாதிரியாக அரசியல் தலைவர்கள் செயற்பட வேண்டும்.

வரையறைக்குட்பட்ட அந்நியச் செலாவணியை வைத்துக்கொண்டே எரிபொருள் கொண்டு வரப்படுகின்றது. ஏப்ரல் மாதம் மழை பெய்யும் வரை, எரிபொருளூடாகவே மின்னுற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது- என்றார். (எ-இ)

## வடக்கு...

11ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கு வரவுள்ளார். தரமுயர்த்தப்பட்டுள்ள வவுனியா பல்கலைக் கழகத்தின் சம்பிரதாயபூர்வ ஆரம்ப நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே அவர் வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

## அத்துமீறிய...

சங்கங்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தன.

காரைநகர் பிரதேச சபையில் இருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டம், பிரதேச செயலகம் வரை சென்றது. அங்கு பிரதேச செயலகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் மனு கையளிக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி சட்டவிரோதமாக தொழிலிலே ஈடுபடுவதால் எமது கடல் வளமும், கடல் சூழலும், கடற்தொழில் உபகரணங்களும், வாழ்வாதாரமும் அழிக்கப்படுகின்றன.

மிகப் பெரிய பாதிப்புக்களுடன் பத்து வருடங்களுக்கு மேலாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

பல போராட்டங்கள், மனுக்கள் கையளித்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதையிட்டு மீனவ சமூகம் கவலையடைகிறது. 2017 , 2018 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிநாட்டு மீனவர் ஒழுங்குபடுத்தல் தடைச் சட்டத்தையும், உள்ளூர் இழுவைமடி தொழில் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தக் கோருகின்றோம். கடந்த பத்து வருடங்களாக இந்திய மீனவர்களால் பலகோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. அதற்கான நட்ட ஈட்டைப் பெற்று வழங்க ஆவன செய்யவேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-319,26,27,125)

## 85 கிலோ....

அவர்களிடம் இருந்து சுமார் 85 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவும் கடற்படையும் இணைந்து நேற்று நடத்திய தேடுதல் நடவடிக்கையில் கஞ்சா கைப்பற்றப்பட்டள்ளது. சுழிபுரம் பறாளாய்ப் பகுதியில் உள்ள வீட்டு வளாகத்திலிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்ட நிலையில் 36 வயதுடைய கணவரும் அவருடைய மனைவியும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் இருவரும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## டெங்கு ஒழிப்பு






யாழ்ப்பாணம், ஜன.22

வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டதுடன், டெங்கு நுளம்பு பரவக்கூடிய பொருள்கள் பிரதேச சபையினரால் அகற்றப்பட்டன. வீதியோரங்களில் முளைத்திருக்கும் பாதீனியம் என்பனவும் அழிக்கப்பட்டன.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இந்த டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலப்பரப்பு 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம். பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 814 7389, 077 614 7333

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 12 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல்.
1 நிலப்பரப்பின் விலை 5 லட்சம்.

077 2880 152, 077 911 6983

(CS 11571) 1

# பதவி வெற்றிடம்

தெல்லிப்பளையில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு உதவி கணக்காளராக கணனி அறிவுள்ள பெண் ஒருவரும், எரிபொருள் நிரப்பும் வேலையிற்கு வேலையாட்களும் தேவை.

மேலதிக தகவல்களிற்கு: 076 665 5643

# பணிப்பெண் தேவை

யாழ். கோண்டாவிலில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு:- 077 4804239

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு கண்ணகை அம்மன் கோவில் வீதியில், 6 பரப்புக் காணி கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
A-32 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
முற்றிலும் பயன்தரும் 30 தென்னைகள் உள்ளன.
3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 1178 578, 077 8147 389

# உடனடி வேலை வாய்ப்பு

நிதித் துறையில் கீழ்வரும் பதவிகளுக்கான நேர்முகத் தேர்வு
பதவி நிலைகள் -



1. Junior Executives - Micro Finance -Male
2. Credit Executives - Business Loan -Male

(மாதாந்தம் ஐம்பது ஆயிரம் ரூபா வரையில் சம்பளம் வழங்கப்படும்)

**தகைமைகள் -**
- ❖ க.பொ.த (சாதாரணம்) சித்தி அல்லது க.பொ.த (உயர்தரம்) சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- ❖ சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- ❖ சிறந்த தொடர்பாடல் தன்மை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- ❖ 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**பதவி நிலைகள்**
1. Accountant - Female
2. Account Assistant - Female
3. Customer Relation Officer - Female

(திறமைக்கு ஏற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)

**தகைமைகள்**
- ❖ கணக்கியல் துறையில் இரண்டு வருடத்துக்கு மேற்பட்ட அனுபவத் தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். - சிறந்த தொடர்பாடல் ஆளுமை உடையவராக இருத்தல் வேண்டும்.
- ❖ 20 - 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு**
இடம் - இல. 400/2,1st floor,
மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
காலம் - 24.01.2022. 25.01.2022, 26.01.2022
நேரம் - காலை 10.00 a.m - 12.00 a.m
மாலை 3.00 p.m - 5.00 p.m

தொடர்பு : 076 223 3648, 074 016 9237

(CS 42347) (3/6)

# கணித, ஆங்கில வகுப்புக்கள்

தரம் - 06, தரம் - 11 வரை
ந. செந்தூரன்
074 215 8340

(cs 11721) (2.6)

# பிரத்தியேக வகுப்பு

தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் 6 தொடக்கம் 0/L வரை
தமிழ் இலக்கிய நயம்
தரம் 10, 11
ஆசிரியர் S. ரகுபதி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 938 9478

(CS 42352) (3/6)

# ALLIANCE FRANCAISE DE JAFFNA

## af பிரெஞ்சு மொழி

- ➢ யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- ➢ அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- ➢ தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- ➢ French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

# தென்னந்தோட்டங்கள் விற்பனைக்குண்டு

எழுதுமட்டுவாழ் A-9 வீதியிலிருந்து 3/4 km தூரத்தில் 12 1/2 ஏக்கர், 16 ஏக்கர், 28 ஏக்கர் காணிகள் விற்பனைக்கு உண்டு.

077 653 1980, 074 037 1960

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் 24 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. நல்ல சூழல் வீடு அமைப்பதற்கு உகந்தது.
(நிலபரப்பு 24 அடிப்பாதையுடன்). பலாலி வீதியிலிருந்து 500m தூரம்

தொடர்பு: 077 6585 999

(CS 1256) 1-6



# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

## வரவேற்பாளர்

**தகைமை**
- க.பொ.த. உயர்தரம் சித்தி

## சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்

**தகைமை**
- க.பொ.த. உயர்தரம் சித்தி

## கிராபிக் டிசைனர் (Graphics Designer)



**தகைமைகள்**
- Photoshop மற்றும் கிராபிக் மென்பொருளில் அனுபவம்.
- பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன்
**24.01.2022 திங்கட்கிழமை மு.ப 09.00 மணிமுதல் ந.ப 12 மணிவரை நேரில் சமுகம்தரவும்.**

**உதயன் பத்திரிகை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 • 02 • 1934



இறப்பு 19 • 01 • 2022

## பரமநாதர் நாகேஸ்வரி (நாகம்மா)

காரைநகர் புதுறோட்டு சிதம்பராமூர்த்தி கேணியடியை பிறப்பிடமாகவும், புதுறோட்டு சிவன் கோவில் வீதியை தற்போதைய வாழ்விடமாகவும் கொண்ட பரமநாதர் நாகேஸ்வரி அவர்கள் கடந்த (19.01.2022) புதன்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா - இராசம்மா தம்பதியரின் மூத்தமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் பரமநாதர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், தனபாக்கியம் (Germany), சிவசுப்பிரமணியம் (பொம்பே மணியம், இலங்கை), சிவலிங்கம் (U.K), சிவராசா (U.K), தவராசா (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பாலஸ்காந்தன் மற்றும் பூமலர், வளர்மதி, அருந்ததி, அஜந்தி ஆகியோரின் அருமை மாமியாரும், பார்த்தீபன் (U.K), தர்சினி (Australia) தர்சிகரன் (U.K), சிவஅன்பு (U.K), சிவகரன் (U.K), துஷ்யந்தினி (U.K), சிவதீபன் (U.K), அபிராம் (U.K), ஆதிசன் (U.K), அபிதன் (U.K), திவிதன் (U.K)ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லக்ஷா, சேயோன் (Australia) ஆகியோரின் அருமைப்பூட்டியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, பரமநாதர், தம்பிராசா மற்றும் சடாசிவம், மாணிக்கம், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னையா, கணபதிப்பிள்ளை, நடராசா மற்றும் பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (23.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக 9.00 மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
தனபாக்கியம் - 0151 4345 9523 (ஜேர்மனி)
சிவசுப்பிரமணியம் - 075 239 9555 (இலங்கை)
சிவலிங்கம் - 079 565 91653 (லண்டன்)
சிவராசா - 078 608 70571 (லண்டன்)
தவராசா - 079 5195 6843 (லண்டன்)

தகவல்:
பிள்ளைகள்

(cr 37399) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.